**OS.NO:20/2022**

**PW2 :** திரு**.**சிவா

நாள் : 05.04.2025

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –**

வாதியும், பிரதிவாதியும் உறவினர்கள் என்றால், சரிதான். இந்த வழக்கில் சாட்சியம் சொல்ல எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால், சரிதான். வாதி அழைத்ததால் சாட்சியம் அளிக்க வந்தேன். வா.சா.ஆ.1 யை எழுத நான் சாட்சி கையெழுத்து போட்டேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால், சரிதான். எனக்கு வங்கி கணக்கு உள்ளது. நான் எல்லா இடங்களிலும் என்னுடைய கையெழுத்தை ஒரே மாதிரியாகதான் போடுவேன். வாதி மீதி கிரைய தொகையை ரொக்க பணமாகவும் மற்றும் என்னுடைய அக்கா மகனும், வாதியின் தம்பியாகிய பன்னீர்செல்வத்தின் மகன் தமிழ்இனியன் பெயரில் ரூ.26 இலட்சம் இணையதளம் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. வா.சா.ஆ.1 யை எழுத யார் முத்திரைத்தாள் வாங்கி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. இந்த சொத்தை பன்னீர்செல்வமும் சேர்ந்து வாங்கினார் என்றால், அது தவறு. பன்னீர்செல்வமும் இந்த சொத்தை வாங்கத்தான் அவ்வளவு தொகை கொடுத்தார் என்றால், எனக்கு அந்த விவரம் தெரியாது. தட்டச்சு செய்த ஒரு ஆவணத்தில் கடைசி பக்கத்தில் நான் கையெழுத்து போட்டேன். நான் கையெழுத்து போட்ட ஆவணம் எழுதும் போது ஜோதிலட்சுமி, பன்னீர், நான், கோட்டிஸ்வரன் ஆகியோர் இருந்தோம். வா.சா.ஆ.1 ல் என்னுடைய பெயர், முகவரி இல்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ல் உள்ளது என்னுடையது கையெழுத்து அல்ல என்றால், சரியல்ல. வாதி,

பிரதிவாதியிடம் தொகை கேட்டு சென்ற போது நான் வாதி உடன் செல்லவில்லை. வாதி, பிரதிவாதியிடம் பலமுறை கேட்டும் பிரதிவாதி கிரையம் கொடுக்க முன்வரவில்லை என்று வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரம் தவறு என்றால், சரிதான். வாதி, பிரதிவாதிக்கு என்ன மாதிரி அறிவிப்பு கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. பன்னீர்செல்வம் என்பவர் ரூ.14 இலட்சம் பிரதிவாதிக்கு கொடுத்துள்ளார் என்றாலும், பன்னீர்செல்வத்திற்கு தெரியாமலும் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றாலும், எனக்கு அது பற்றி தெரியாது. பணம் கொடுத்த போதுதான் வா.சா.ஆ.1 எழுதினார்கள். நான் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

S/d. M.Selvam,
I Additional District Judge,
Ranipet.